**மஸ்கெலியா பிரதேச சபையின் 2022.09.12 சபையமர்வு அறிக்கை**

2022.09.12ஆம் திகதி காலை 09.30 மணியளவில் கௌரவ தவிசாளர் G.செண்பகவள்ளி அவர்களின் தலைமையில் சபையமர்வு ஆரம்பமானது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இன்றைய சபையமர்விற்கு வருகை தந்துள்ள அனைவரையும் அன்புடன் வரவேற்பதோடு கடவுள் வணக்கத்துடன் இன்றைய சபையமர்வானது ஆரம்பமாகும்.

## 1. கடந்தகால சபை அறிக்கையை சமர்ப்பித்தல்

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அடுத்ததாக கடந்த மாத சபையமர்வு அறிக்கையினை சபை அனுமதிக்காக முன்வைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

கடந்த 08ம் மாதம் 15ம் திகதி நடைபெற்ற மாதாந்த சபையமர்வு அறிக்கையில் தாங்களின் அறிவுறுத்தலுக்கு அமைய தோட்டப்புறங்களில் நடமாடும் சேவையினூடாக வியாபார அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொடுத்தல் தொடர்பாக பேசியிருந்தீர்கள், அது தொடர்பாக ஏனைய கௌரவ உறுப்பினர்களும் தமது கருத்துக்களை தெரிவித்திருந்தனர், அதற்கமைய எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

தீர்மானத்திற்கு அமைய உரிய இடங்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது, அத்துடன் வர்த்தக சங்கத்திற்கும் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

பிரிமா கோதுமை மா விநியோகம் தொடர்பாக 07ம் மாத சபையமர்வில் என்னால் பிரேரணை முன்வைக்கப்பட்டிருந்தது, மஸ்கெலியா நகரில் ஒரு பிரிமா விநியோகத்தர் தான் உள்ளார், கடந்த காலங்களில் மாவின் விலை அதிகரிக்கப்பட்ட போது மாவினை எந்தவொரு கடைக்கும் விநியோகிக்காமல் விலை அதிகரித்த பின் விற்பனை செய்துள்ளார். இந்த காலக்கட்டங்களிலே நுகர்வோர் மாவு பெற்றுக்கொள்ள முடியாமல் பாரிய இன்னல்களுக்கு முகங்கொடுத்ததை காணக்கூடியதாக உள்ளது. இந்த சபையிலே இப்பிரேரணையினை முன்வைத்து முன்னால் ஜனாதிபதி அவர்களுக்கும் இது தொடர்பாக கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. அத்துடன் நகர வர்த்தகர்கள் அனைவரையும் அழைத்து நாம் பேசியிருந்தோம். அனைவரின் கையொப்பத்தை பெற்று கடிதத்தை அனுப்பியிருந்தோம், எனினும் தீர்மானம் கிடைக்கப்பெறவில்லை. அதன் பின்னர் புதிய ஜனாதிபதி அவர்களுக்கும் இவ்விடயத்திற்கு கடிதம் அனுப்புமாறு கேட்டிருந்தேன் இதற்கான எந்த தீர்வும் கிடைக்கப்பெறவில்லையே.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

குறித்த விடயம் தொடர்பாக கடிதம் அனுப்பப்பட்டு, அதற்கான பதில் கடிதமும் கிடைக்கப்பெற்றுள்ளது, கடிதங்கள் பகுதியில் முன்வைக்கப்படும்.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

தற்போது குறித்த இரு தினங்களில் மாவினை பதுக்கி வைத்து விநியோகம் செய்யாமல் இருக்கின்றார். இன்னும் 02 பேருக்காவது இந்த விநியோக நடவடிக்கையை பெற்றுக்கொடுக்குமாறு தான் கூறுகின்றேன், எனவே இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் S.சுப்பிரமணியம் அவர்கள் (ஐ.தே.க)**

கடந்த சபையில் சிறப்பு அங்காடிகளில் விலைப்பட்டியலை தமிழ் மொழியில் வழங்குவது தொடர்பாக கூறியிருந்தேன், அதற்கான நடவடிக்கை எடுக்குமாறும் குறிப்பிட்டிருந்தேன்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அவ்விடயம் தொடர்பாக வர்த்தக சங்கத்திடம் கூறியுள்ளோம், கூட்டமொன்றை ஏற்பாடு செய்வோம், அதற்கு முன்னர் அவர்களுக்கு அறிவிப்போம்.

**கௌரவ உறுப்பினர் S.சுப்பிரமணியம் அவர்கள் (ஐ.தே.க)**

துரித கதியில் இதற்கான வேலையினை செய்ய வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் K.நித்தியானந்தன் அவர்கள் (இ.தொ.கா)**

கடந்த கால சபையமர்வு அறிக்கை சரியென நான் முன்மொழிகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

அதனை நான் வழிமொழிகின்றேன்.

**தீர்மான இல 01**

2022.08.15ம் திகதி நடைபெற்ற சபையமர்வின் அறிக்கை சரியென சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## 2. கௌரவ தவிசாளர் அவர்களின் விசேட அறிவித்தல்

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

தோட்ட தொழிலாளர்களின் சம்பள விடயம் தொடர்பாக உயர் நீதிமன்றத்திலே 1000.00ரூபா சம்பளம் வழங்க வேண்டும் என்று தீர்மானம் வழங்கப்பட்டுள்ளது, எனினும் மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனம் அந்த சம்பளத்தை வழங்காமல் மக்களுக்கு ஒரு அசாதாரண ஒரு சூழ்நிலையினை உருவாக்கியுள்ளனர். இதன் காரணமாக தேயிலை தூளை ஏற்றுமதி செய்வதனை நிறுத்துவதற்கான வேலைத்திட்டம் ஒன்றை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. இவ்விடயம் தொடர்பாக கௌரவ உறுப்பினர்களும் ஆதரவு நன்மையாக அமையும். தற்போது தொழிலாளர்கள் எடுக்கும் ஒரு கிலோ தேயிலைக்கு 50.00ரூபா தான் வழங்குகின்றார்கள். இதனால் நேற்றிலிருந்து தொழிற்சாலையில் அரைக்கப்படும் தேயிலையை அனுப்ப விடுவதில்லை என்று தீர்மானித்துள்ளோம். நீதிமன்ற தீர்மானத்திற்கு அமைய சம்பளம் வழங்கும் வரை தொழிற்சங்க நடவடிக்கைகளை கைவிடப்போவது இல்லை என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

கௌரவ தவிசாளர் அவர்களின் விசேட உரையிலே பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள பிரச்சினை தொடர்பாக கூறியிருந்தார். இன்று அதிகாலையில் நடைபெற்ற ஒரு விடயத்தை நான் பதிவு செய்ய விரும்புகின்றேன். தற்போது 05 நிமிடத்திற்கு முன்னராக கௌரவத்திற்குரிய ஜீவன் தொண்டமான் அவர்களின் செயலாளர் அவர்களுக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் அவர்களுக்கும் இது தொடர்பான தகவலை வழங்கியிருந்தேன். தொழிலாளர்கள் அனைவருமே வேலை செய்ய வேண்டும், தேயிலை மற்றும் ஏற்றுமதி செய்வதில் மாத்திரம் தடையாக இருக்க வேண்டும் என்பது தான் கருத்து. தேயிலை ஏற்றுமதி தடையாக இருக்குமானால் கம்பனிகாரர்கள் மக்களுக்கு ஏற்ப உரிய வேதனத்தை வழங்குவார்கள் என்பதே கருத்து. இது தொடர்பாக மறே வட்டாரத்தில் உள்ள முகாமையாளர் தலைவர்களை அழைத்து தொழிற்சங்கம் கூறுவதற்கு ஏற்ப நீங்கள் தொழிற்படுங்கள், 03 நாள் வேலை தான் தருவோம், தாங்கள் எப்படி தீபாவளியை எவ்வாறு கொண்டாடுவீர்கள் என்பதனை நான் பார்த்துக்கொள்கின்றேன் என்று கூறியுள்ளார். இன்று நடைபெறும் கலந்துரையாடலில் மக்கள் எவ்வித கட்சி பேதமும் இன்றி அனைத்து தலைவர்களும் ஒன்றிணைந்து தான் நல்ல முடிவை கேட்டுள்ளனர், இதற்கு வழங்கிய பதில் இவ்வாறாக உள்ளது. எனவே உடனடியாக இதற்கான தீர்வு காண வேண்டும். அனைவரும் ஒன்றிணைந்தால் மஸ்கெலியா பிளான்டேசனுக்கு தகுந்த பாடத்தை புகட்டலாம்.

திகதி - 2022.09.12

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனத்திற்குட்பட்ட அனைத்து பிரதேசங்களிலும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர்.

## 3. பிரதேச சபைக்கு கிடைக்கப் பெற்ற கடிதங்கள் முறைப்பாடுகளை சபைக்கு முன்வைத்தல்

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அடுத்ததாக சபைக்கு கிடைக்கப்பெற்ற கடிதங்கள் மற்றும் முறைப்பாடுகளை முன்வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கடித இல 01**

**அனுப்புனர்** - ஜனாதிபதி அலுவலகம்.

**விடயம்** - பிரிமா மா விநியோகத்தர் தொடர்பான விடயத்திற்கான பதில் கடிதம்.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

கௌரவ தலைவர் அவர்களே, இங்குள்ள பிரச்சினை அந்த பிரிமா மா விநியோகத்தர் தான். சாமிமலை இருக்கின்ற 1000இற்கு மேற்பட்டோர் இவரை நம்பி தான் உள்ளனர். மாவின் விலை அதிகரிக்கும் போது மாவினை பதுக்கி விலை அதிகரித்ததும் அவற்றை விற்பனை செய்கின்றனர். குறித்த விநியோகத்தர் வேண்டாமென அனைத்து வர்த்தகர்களும் கையொப்பமிட்டு வழங்கியுள்ளனர். அனைத்து கௌரவ உறுப்பினர்களும் கையொப்பமிட்டுள்ளனர். தவிசாளர் அவர்கள் கையொப்பமிட்டு ஜனாதிபதி செயலகத்திற்கு கடிதம் அனுப்பியுள்ளோம். கௌரவ உறுப்பினர் சுப்பிரமணியம் அவர்கள் குறிப்பிட்டது போல வேறு நகரங்களுக்கு மாவினை கொண்டு செல்கின்றனர். இவ்விநியோகத்தருக்கு பதிலாக வேறு ஒரு தகுதியுடைய விநியோகத்தரை நியமிக்க வேண்டும். ஜனாதிபதி அலுவலகத்தில் செப்டம்பர் 12ம் திகதிக்குள் பதில் வழங்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது, அவ்வாறு பதில் கிடைக்காவிட்டால் பாதையில் இறங்கி போராட்டம் செய்ய வேண்டிய நிலை ஏற்படும்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

மஸ்கெலியாவில் வர்த்தக சங்கமொன்று உள்ளதா இல்லையா என தெரியவில்லை, வலுவான வர்த்தக சங்கமொன்று இல்லாமை மஸ்கெலியா நகரை மாத்திரம் பாதிக்கவில்லை, மஸ்கெலியா பிரதேசத்தை சேர்ந்த அனைவரையும் தான் பாதிக்கின்றது. வர்த்தக சங்கத்தை ஸ்தீரப்படுத்த கூறி நான் சபையில் முன்மொழிவொன்றை வைக்கின்றேன்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

வர்த்தக சங்கத்தை ஸ்தீரப்படுத்துமாறு நாம் கூற முடியாது.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

இவ்விடயம் தொடர்பாக நாம் பிரதேச செயலாளருக்கு கடிதம் அனுப்புவோம்.

**கௌரவ உறுப்பினர் S.சுப்பிரமணியம் அவர்கள் (ஐ.தே.க)**

நாம் நுகர்வோருக்கு நன்மையை பெற்றுக்கொடுக்கும் விடயங்களை தான் பேசுகின்றோம், என்னுடைய யோசனை நுகர்வோர் பாதுகாப்பு சங்கமொன்றை உருவாக்கி அதனை பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக மாற்றும் சந்தர்ப்பத்தில் வர்த்தக சங்கத்திற்கு எதிராகவும் போகலாம், மக்களுக்கும் நேரடியாக இந்நிறுவனத்துடன் தொடர்புகொள்வதற்கான வாய்ப்பு ஏற்படும்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**



உறுப்பினர் கொண்டுவந்த விடயம் உண்மையில் நல்ல விடயம் இவ்வாறு ஒரு விடயத்தை செய்ய முடியுமான என தேடிப்பார்க்கவும். நுகர்வோர் சங்கம் ஒன்று இயங்கினால் அது நன்மையாக அமையும். கௌரவ உறுப்பினர் கொண்டுவந்த விடயத்தை நான் வழிமொழிகின்றேன்.

**தீர்மான இல 02**

குறித்த விடயம் தொடர்பாக பிரதேச செயலாளருக்கு கடிதமனுப்ப தீர்மானிக்கப்பட்டது.

**கடித இல 02**

**அனுப்புனர்** - போக்குவரத்து அதிகார சபை.

**விடயம்** - அதிக பஸ் கட்டணம் அறவிடல் தொடர்பான கடிதம்.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

கடந்த சபையில் இப்போக்குவரத்து கட்டணங்கள் தொடர்பாக நான் குறிப்பிட்டிருந்தேன், அன்றைய தினம் நான் சபை நிறைவுற்று வீட்டுக்கு செல்லும் போது சம்பந்தப்பட்ட வாகனசாரதிகள் என்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு இவ்விடயம் தொடர்பாக வினவினர். அவ்வளவு விரைவாக இவ்விடயம் எவ்வாறு வெளியில் சென்றது என்று தெரியவில்லை, மக்களின் நலனுக்காகவே இவ்விடயத்தை நான் குறிப்பிட்டிருந்தேன்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

கௌரவ உறுப்பினர் அவர்களே, இவ்விடயம் தொடர்பாக தாங்கள் பேசியது மட்டும் அல்ல. இவ்விடயம் தொடர்பாக தாங்களது பிரதேசத்தில் இருந்து ஒரு குழு, கௌரவ பாரளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் அவர்களை சந்திப்பதற்கு, அமைச்சரின் செயலாளர் அவர்கள் பாதைப்பிரச்சினை மற்றும் கட்டணங்கள் தொடர்பாக என்னிடம் வினவினர். பாதைப்பிரச்சினை காரணமாக எங்களுக்கு பேரூந்து கட்டணம் அதிகமாக அறவிடுகின்றனர் என்று கூறியுள்ளனர்.

**கடித இல 03**

**அனுப்புனர்** - மாவட்ட செயலகம் - நுவரெலியா.

**விடயம்** - மஸ்கெலியா சமுர்த்தி வங்கி கட்டிடம் தொடர்பான கடிதம்.

**கௌரவ உறுப்பினர் S.A.திஸாநாயக்க அவர்கள் (ஸ்ரீ.பொ.பெ)**

அக்கடிதத்திற்கு அமைவாக கடந்த சபையிலே முன்மொழியப்பட்டதாவது, அவ்விடத்திலே ஒரு வீட்டை பெற்றுக்கொண்டு தான் இதனை நடாத்தி செல்கின்றோம். மஸ்கெலியா கிராம அலுவலகர் காரியாலயத்திற்கு அண்மையில் இருபது இலட்சம் பணத்தை செலவு அமைக்கப்பட்ட சன சமூக நிலையமொன்று உள்ளது அதற்கு 02 ஜன்னல் கதவுகளை பொருத்தி கொடுத்தால் அதனை சமுர்த்தி வங்கியாக பயன்படுத்தலாம். தனியார் நிறுவனத்திற்கு ரூபாய் 25,000.00 அல்லது ரூபாய் 30,000.00 வாடகையினை செலுத்துவதை தவிர்த்து அரசாங்கத்தினால் திருத்தம் செய்ய முடியும் என்றால் நல்லது. இதனை நாங்கள் சபையில் கேட்கின்றோம்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

வங்கியினை ஆரம்பிப்பதாக இருந்தால் அனைத்தும் முறைப்படி தானே செய்திருப்பார்கள், இவ்விடயம் வேடிக்கையாக உள்ளது, மீண்டும் இவ்விடயம் தொடர்பாக தெளிவுப்படுத்தி கடிதம் அனுப்பவும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

ஏற்கனவே அவ்வாறு தான் கடிதம் அனுப்பினோம், அதற்கு தான் அவர்கள் பதில் அனுப்பியுள்ளனர்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

06 மாதங்களுக்கு என்பது இது ஒரு விளையாட்டு. அவர்கள் கேளி செய்கின்றார்கள். அரசாங்க நிறுவனம் என்பது ஐந்து வருடங்களுக்காவது இருக்க வேண்டும். அவ்வாறு இல்லை என்றால் அவர்கள் இதனை எடுக்க மாட்டார்கள். இது பொய்.

இவ்விடயம் ஒரு கண் துடைப்பு, யாரையோ திருப்திப்படுத்த செய்யப்பட்ட விடயம். வங்கியில் உள்ள பணத்தை வைத்தே கட்டிடமொன்றை அமைத்திருக்கலாம். இக்கடிதத்தின் பதிலை ஏற்றுக்கொள்ள முடியாது, இவ்விடயத்தை பிரதேச, மாவட்ட செயலாளருக்கு தவிசாளர் அவர்கள் தெரியப்படுத்தவும்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

சமுர்த்தி வங்கியொன்று வேண்டும் என்று சபையில் நிறைய தடவைகள் பேசி கஸ்டப்பட்டு கடைசியில் இந்த உப காரியாலயமாக கிடைத்தது தற்போது அதும் இயங்கவில்லை என்பதனை ஏற்றுக்கொள்ள முடியாது. இவ்விடயம் தொடர்பான மீண்டும் கடிதமொன்றை அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உபதவிசாளர் P.P.பிரதீபன் அவர்கள் (இ.தொ.கா)**

இச்சமுர்த்தி வங்கி தொடர்பான விடயம் தொடர்பாக நாம் கவனம் செலுத்த வேண்டும். திறக்கப்பட்ட சமுர்த்தி காரியாலயம் சமுர்த்தி அதிகார சபையின் கீழ் இயங்குகின்றதா என்பதில் எனக்கு சந்தேகம் உள்ளது. மஸ்கெலியாவில் சமுர்த்தி காரியாலயம் இருக்கும் போது மக்கள் நோர்வூட் வங்கிக்கு செல்கின்றார்கள் என்றால் இது தொடர்பாக நாம் சிந்திக்க வேண்டும்.

**கடித இல 04**

**அனுப்புனர்** - உள்ளூராட்சி துணை ஆணையாளர் காரியாலயம்.

**விடயம்** - சபையமர்வு அறிக்கை அவதானிப்பு கடிதம்.

**கடித இல 05**

**அனுப்புனர்** - விடயப்பொறுப்பாளர் - மஸ்கெலியா பிரதேச சபை.

**விடயம்** - இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனம் மற்றும் கனடா அரசாங்கமும் இணைந்து ஏற்பாடு வேலைத்திட்டத்தின் செயற்றிட்டத்தின் செயற்றிட்ட குழுவிற்கான அனுமதியினை பெற்றுக்கொள்ளல் தொடர்பான கடிதம்.

**தீர்மான இல 03**

செயற்றிட்ட குழுவினை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

## 4. நிதி மற்றும் ஏனைய குழு அறிக்கைகளை சமர்ப்பித்தல்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அடுத்ததாக நிதி மற்றும் ஏனைய குழு அறிக்கையினை சபைக்கு சமர்ப்பித்தல்.

கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்களினால் நிதிக்குழு அறிக்கையில் குறிப்பிட்டிருந்த சிறுவர் பூங்கா பாராமரிப்பு தொடர்பான விடயம் தொடர்பாக கருத்து தெரிவிக்கப்பட்டதுடன், பிரவுன்ஸ்விக் பிரதேசத்தில் கவனிப்பார் அற்று காணப்படும் சிறுவர் பூங்கா ஒன்றை சபையின் கீழ் கொண்டு வருவது தொடர்பாகவும் கருத்து தெரிவிக்கப்பட்டது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

டிரஸ்ட் நிறுவனத்துடன் கலந்துரையாடி இவ்விடயத்திற்கான நடவடிக்கை எடுப்போம்.

கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் அவர்களினால் சிறுவர் பூங்காவினை டென்டரில் வழங்குதல் தொடர்பான கருத்து முன்வைக்கப்பட்டது.

கௌரவ உறுப்பினர் S.சுப்பிரமணியம் அவர்களினால் மஸ்கெலியா பொது விளையாட்டு மைதானத்திற்கான மின்சார இணைப்பினை பெற்றுக்கொள்ளல் தொடர்பான விடயம் தொடர்பாக கருத்து தெரிவிக்கப்பட்டது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இவ்விடயம் தொடர்பாக டிரஸ்ட் நிறுவனத்திடம் கேட்ட போது மிகுதி பணம் இல்லை என்று கூறினர். மின்சார இணைப்பை பெறுவதற்கான பணம் இல்லை என்று கூறினர். இது தொடர்பாக பொறியியலாளர் ஒருவரிடமும் மதிப்பீடு செய்ய கோரியிருந்தோம், பணத்திற்கு ஏற்பாடு செய்வதாகவும் கூறினோம், எனினும் அவர் வருகின்றேன், என்று கூறி கடைசியில் வரவில்லை. மேலும் இவ்விடயம் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு சபையினை சற்று நேரத்திற்கு பொது சபையாக்க அனுமதியினை கோருகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

சபையினை பொது சபையாக்கும் விடயத்தினை நான் முன்மொழின்றேன்.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

அதனை நான் வழிமொழிகின்றேன்.

**சபை சற்று நேரத்திற்கு பொது சபையாக மாற்றப்பட்டது.**

**தீர்மான இல 04**

சபை பொது சபையாக மாற்றப்பட்டு மஸ்கெலியா பொது விளையாட்டு மைதானம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டு இலங்கை மின்சார சபையின் மஸ்கெலியா கிளையின் மின்சார பொறியியலாளருடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்களினால் நிதிக்குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த தீயிடைவெளிகளை சுத்தம் செய்தல், வீதி மின்விளக்குகளை பொருத்தல், போதைப்பொருள் ஒழிப்பு, தீபாவளி களியாட்ட நிகழ்வுகள் மற்றும் தற்காலிக கடையறைகள் தொடர்பான விடயம் தொடர்பாக கருத்து தெரிவிக்கப்பட்டது.

நிதிக்குழு அறிக்கையில் குறிப்பிட்டிருந்த 2022ம் ஆண்டு தீபாவளி பண்டிகையை முன்னிட்டு களியாட்ட நிகழ்வுகளை நடத்தல் மற்றும் தற்காலிக கடையறைகளை டென்டரில் வழங்குதல் தொடர்பான விடயம் தொடர்பாக கௌரவ உறுப்பினர்களினால் கலந்துரையாடப்பட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள் தொடர்பாக தீர்மானிக்கப்பட்டது.

கௌரவ உறுப்பினர் S.சுப்பிரமணியம் அவர்களினால், நிதிக்குழு அறிக்கையில் குறிப்பிட்டிருந்த பேருந்துகளில் இருந்து கழிகளை வீசுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது மற்றும் தீ இடைவெளிகளை சுத்திகரித்தல் தொடர்பாக கருத்து தெரிவிக்கப்பட்டது.

கௌரவ உறுப்பினர் S.A.திஸாநாயக்க அவர்களினால், நிதிக்குழு அறிக்கையில் குறிப்பிட்டிருந்த தீ இடைவெளிகளை சுத்திகரித்தல் தொடர்பாக கருத்து தெரிவிக்கப்பட்டது.

கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்களினால், நிதிக்குழு அறிக்கையில் குறிப்பிட்டிருந்த தீ இடைவெளிகளை சுத்திகரித்தல் தொடர்பாக கருத்து தெரிவிக்கப்பட்டது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

கௌரவ உறுப்பினர்களே இவ்விடயம் தொடர்பாக வாத விவாதங்கள் தேவையில்லை, அவ்விடத்திற்கு அருகிலுள்ள வீட்டில் பெண் பிள்ளைகள் இருப்பதனால் தான் அவர்களின் பாதுகாப்பு கருதி கூறுகின்றேன். நானும் அங்கு சென்று பார்த்தேன், மிகவும் மோசமாக உள்ளது.

**கௌரவ உறுப்பினர் T.வசந்தகுமார் அவர்கள் (இ.தொ.கா)**

திகதி - 2022.09.12

நிதிக்குழு அறிக்கை சரியென நான் முன்மொழிகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

அதனை நான் வழிமொழிகின்றேன்.

**2022.09.05ம் திகதி நிதிக்குழு அறிக்கையின் சிபாரிசுகள் சபையில் பின்வரும் தீர்மானங்களாக நிறைவேற்றப்பட்டது.**

**விடய இல 01**
மஸ்கெலியா பிரதேச சபைக்குரித்தான சிறுவர் பூங்கா பராமரிப்பு தொடர்பான விடயம் நிதிக்குழுவில் கலந்துரையாடப்பட்டது.

**தீர்மான இல 05**
சிறுவர் பூங்காவினை உரிய வகையில் பராமரிப்பு செய்து பூங்காவினை திறக்கும் நேரம், மூடும் நேரம் தொடர்பாக அறிவித்தல் பலகை ஒன்றை காட்சிப்படுத்த சபை அனுமதி வழங்கியது.

**விடய இல 02**
மஸ்கெலியா நகரில் தரித்து வைத்துள்ள பேரூந்துகளில் இருந்து கழிவுகளை வீசுவது தொடர்பான விடயம் நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

**தீர்மான இல 06**
மேற்குறித்த விடயம் தொடர்பாக கழிவுகளை வீசுபவர்களுக்கு எதிராக தண்டப்பணம் அறிவிடுவதற்கு அல்லது வேறு ஒரு நடவடிக்கையை மேற்கொள்ள நிதிக்குழு சிபாசு செய்த விடயத்தை சபை ஏற்றுக்கொண்டது.

**விடய இல 03**
மஸ்கெலியா நகரிலுள்ள தீ இடைவெளிகளில் (Fire gap) நிலவும் சுகாதார பிரச்சினைகள் மற்றும் அங்கு போதைப்பொருள் பாவனை தொடர்பான விடயம் நிதிக்குழுவில் கலந்துரையாடப்பட்டது.

**தீர்மான இல 07**
குறித்த தீ இடைவெளிகளை முறையாக சுத்தம் செய்ய சபை தீர்மானித்தது.

**விடய இல 04**
தற்போது நாட்டில் தபால் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளமையினால் அலுவலகத்தின் அஞ்சல் நடவடிக்கைகளுக்கான மாதாந்த கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பாக விடய பொறுப்பாளரினால் வழங்கப்பட்ட கடிதம் நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டது.

- 15.00 ரூபாவாக காணப்பட்ட சாதாரண தபால் கட்டணம் தற்போது 50.00ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.
- 45.00 ரூபாவாக காணப்பட்ட பதிவு தபால் கட்டணம் தற்போது 110.00ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.
- அதிவேக தபால் கட்டணங்களும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

**தீர்மான இல 08**
மேற்படி விடயத்திற்கான அவசியத்தன்மை மற்றும் கட்டண அதிகரிப்பினை கருத்திற்கொண்டு மாதாந்த தபால் சேவை கட்டணமாக இருந்த 10,000.00ரூபாவினை 20,000.00ரூபாவாக அதிகரிக்க நிதிக்குழு சிபாரிசு செய்த விடயத்திற்கு சபை அனுமதி வழங்கியது.

**விடய இல 05**
மஸ்கெலியா பிரதேச சபையின் குழு உறுப்பினர்களுக்கான பிரயாண செலவினை அதிகரிப்பது தொடர்பாக கௌரவ உறுப்பினர் எஸ்.சுரேஸ்குமார் அவர்களினால் வழங்கப்பட்ட கடிதம் நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டது.

**தீர்மான இல 09**
மேற்படி விடயம் தொடர்பாக உள்ளூராட்சி துணை ஆணையாளருக்கு கடிதமனுப்ப நிதிக்கழு சிபாரிசு செய்த விடயத்திற்கு சபை அனுமதி வழங்கியது.

**விடய இல 06**
மஸ்கெலியா நகரிலுள்ள கடைகளில் பொருட்களுக்கான விலைப்பட்டியலை காட்சிப்படுத்துவது தொடர்பான விடயம் நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டது.

**தீர்மான இல 10**
மஸ்கெலியா நகரிலுள்ள கடைகளில் பொருட்களுக்கான விலைப்பட்டியலை காட்சிப்படுத்துவது தொடர்பான நகர வர்த்தக சங்கத்திற்கு கடிதமொன்றை அனுப்ப நிதிக்குழு சிபாரிசு செய்த விடயத்தை சபை ஏற்றுக்கொண்டது.

**விடய இல 07**
அலுவலகத்திற்கான கண்காணிப்பு கமராக்களை பொருத்தும் விடயம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

**தீர்மான இல 11**
அலுவலகத்திற்கான கண்காணிப்பு கமராக்களை பொருத்தும் விடயத்தை துரித்தப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுப்பதற்கு சபை அனுமதி வழங்கியது.

**விடய இல 08**
போதைவஸ்து பாவனை மற்றும் ஒழிப்பு தொடர்பாக விழிப்புணர்வு வேலைத்திட்டத்தை மேற்கொள்வதற்காக கௌரவ உறுப்பினர் கே.யோகேந்திரன் அவர்களினால் வழங்கப்பட்ட கடிதம் நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டது.

**தீர்மான இல 12**
மேற்படி விடயத்திற்கு வட்டாரத்திற்கு 03பேர் வீதம் அழைத்து விழிப்புணர்வு கூட்டத்தை நடத்தவும் எதிர்வரும் காலங்களில் வீதி நாடகங்களை நடாத்துவதற்கும் சபை அனுமதி வழங்கியது.

**விடய இல 09**
வீதி விளக்குகள் மற்றும் சபையமர்வு நடவடிக்கைகளுக்கான Sound System இனை கொள்வனவு செய்வதற்கான விலைமனுகோரல்கள் நிதிக்குழுவில் திறக்கப்பட்டது.

| | Dinapala (Pvt) Ltd | | | Robert Agencies (Pvt) Ltd | | | Hon electronics | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| Specification | Brand | Warrenty | Amount | Brand | Warrenty | Amount | Brand | Warrenty | Amount |
| Efective power - 400W (2 boxes)<br>Deiver Unit - 10'' Subwoofer<br>10'' Satellite speaker<br>Impedance - 4.0HM<br>Frequency response - 40Hz - 20KHz<br>Signal - Noise Ratio :>92db<br>WHTH LED/EQ/USB/SD<br>Wireless microphone<br>Microphone with wire | Ahuja | 1 year | 197,120.00 | Ahuja | 1 year | 307,380.00 | Universal | 1 year | 89,850.00 |

| Item | Brand | Street Lamp cobra 50W (With arm and bracket) | Street Lamp cobra 100W (With arm and bracket) | Street Lamp cobra 150W (With arm and bracket) |
|---|---|---|---|---|
| Lotus tradways (3 years) | China | 16,800.00 | 22,400.00 | 28,900.00 |
| NMI Infra (3 years) | Green | 17,000.00 | 26,500.00 | 36,370.00 |
| UK Electricals (1 year) | | - | 12,500.00 | 17,995.00 |
| New Gem city (3 years) | Gem Light | 12,000.00 | 16,500.00 | 19,750.00 |
| DSA Electricals (3 years) | Galle | 12,800.00 | 19,500.00 | 26,500.00 |
| Asian Electrical (3 years) | | 16,000.00 | 23,000.00 | 30,000.00 |

**தீர்மான இல 13**
விலையினையும் தரத்தினையும் கருத்திற்கொண்டு Sound System இனை **Hon electronics** நிறுவனத்திலும் வீதி விளக்குகளை New Gem City நிறுவனத்திலும் கொள்வனவு செய்ய சபை அனுமதி வழங்கியது.

**விடய இல 10**
மஸ்கெலியா நகரிலுள்ள உணவகங்கள் தொடர்பான விடயம் நிதிக்குழுவில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

**தீர்மான இல 14**
உணவகங்களின் தரம் தொடர்பான விடயத்தை பரிசீலனை செய்ய சுகாதார பரிசோதகருக்கு கடிதமனுப்ப தீர்மானிக்கப்பட்டது.

**விடய இல 11**
2022ம் ஆண்டு தீபாவளி பண்டிகையை முன்னிட்டு தற்காலிக கடையறைகள் மற்றும் களியாட்ட நிகழ்வுகள் தொடர்பான விடயம் நிதிக்குழுவிற்கு வருமான பரிசோதகர் மூலம் முன்வைக்கப்பட்டது.

**தீர்மான இல 15**
தற்காலிக கடையறைகள் மற்றும் களியாட்ட நிகழ்வுகளை திறந்த கேள்வி அறிவித்தல் அறிவிக்கவும் பத்திரிகையில் விளம்பரங்களை பிரசுரிக்கவும் சபை அனுமதி வழங்கியது.

## 5. பிரேரணைகள்

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அடுத்ததாக கௌரவ உறுப்பினரின் பிரேரணையினை முன்வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் S.சுப்பிரமணியம் அவர்கள் (ஐ.தே.க)**

என்னுடைய முதலாவது பிரேரணையானது, எமது சபை புதிய சபையாக ஆரம்பித்து முதலாவது சபை நிறைவு பெற்று மேலதிகமாக 06 மாதங்கள் அதிகமாக கடந்து வந்திருக்கின்றோம், ஆனால் நிதி தொடர்பில் நாம் அதிக கவனம் செலுத்தாமல் காலத்தை வீணடித்திருக்கின்றோம், இதை சபை ஏற்றுக்கொள்ள வேண்டும். நான் சபை அமர்வுகளின் போது நிதி தொடர்பிலான கருத்துக்களை முன்வைத்திருக்கின்றேன். இதில் விடுதிகள் பதிவுகளின் அதிக கவனம் செலுத்தியிருக்கலாம். இன்று அதிகளவான விடுதிகள் காணப்படுகின்றது. நல்லதண்ணி பிரதேசங்களில் விடுதிகள் அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த விடுதிகளுக்கான சபை அறவிடும் தொகைகள் மிக குறைவானதாக இருந்து வருகின்றது. தற்போது காணப்படும் தொகைகளில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும், தற்போது எமது நாணயம் மிக வீழ்ச்சி கண்டுள்ளது. 40 வருடங்களுக்கு முன்பும் அறிமுகம் செய்த தொகை போதுமானதாக இருக்காது எனவே துரிதமாக செயற்பட்டு மாற்றத்தை

கொண்டு வர வேண்டும், அடுத்த விடயம் வாகனப்பதிவுகள் சபை அதிகாரிகள் சரியான முறையில் செயற்படவில்லை. வேன் பதிவு செய்யப்படாத காரணத்தால் சபை இன்று வரை பாரிய நிதி தொகை இழந்து வந்திருக்கின்றது.

எமது சபைக்கு சொந்தமான புதிய வர்த்தக நிலையத்தின் வாடகை கூலி திருத்தி அமைக்கப்படவில்லை என்றே கூற வேண்டும், நிதி திரட்டவதற்கான உபாயங்களை உருவாக்க வேண்டும், நிதி திரட்டுவதற்கான உபாயங்கள் வெளியில் இருந்து வருகை தருகின்ற வாகனங்களுக்கு தரிப்பிட கட்டணம் அறவிடும் முறையை நடைமுறைப்படுத்தலாம்.

மறுபடியும் வார சந்தையை நடைமுறைக்கு கொண்டு வர வேண்டும். வெளிபிரதேசங்களில் இருந்து கொண்டு வரும் மரக்கறிகளின் விலைகள் வாகனத்தை தாண்டி காணப்படுகின்றது, இதனை கருத்திற்கொண்டு நமது பகுதியில் இருக்கக் கூடிய மரக்கறிகளை அம்பகமுவ பிரதேச சபையுடன் இருந்து பெற்றக்கொள்ள முயற்சி மேற்கொள்ளலாம், அதேபோன்று கொட்டகலை , நோர்வூட் ஆகிய சபைகளின் ஆதரவை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும். இந்த 04 சபைகளுக்கும் பொதுவான மத்திய நிலையத்தை உருவாக்கி பொருட்கள் சேகரிப்புகளை உறுதி செய்ய முடியும் இவ்விடயத்தை நடைமுறைக்கு கொண்டு வர சில பிரச்சினைகள் வரக்கூடும். இருந்தாலும் முயற்சி கொண்டு வர சில பிரச்சினைகள் வரக்கூடும். இருந்தாலும் முயற்சி மேற்கொள்வது எமது கடமை எமது பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் விவசாயம் மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு எமது சபையினூடாக மேற்கொள்ளப்படும் சேதன பசளையை மானிய விலையிலோ அல்லது இலவசமாக நாம் பெற்றுக்கொடுக்க முன்வர வேண்டும்.

சபையின் கீழ் இயங்கும் வாகனதரிப்பிடங்களுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கி நிதி சேகரித்தல் தொடர்பாக நான்கு இலட்சத்து அறுபத்தைந்தாயிரம் சபைக்கு நட்டம். அம்பகமுவ காலகட்டத்தில் சேர்த்து பார்த்தால் எட்டு இலட்சம் ஒன்பது இலட்சம். இவ்விடயத்தில் கவனயீனமாக உள்ளோம். 31வாகனங்கள் உள்ளன. லொறி இதில் இணைக்கப்படவில்லை, இத்தொகையை நாம் பெற்றுக்கொள்ளாமல் தற்போது ஒரு முறையில் செலுத்த அவர்கள் தயாராக இருக்க மாட்டார்கள் அதனை எவ்வாறு பெற்றுக்கொள்வது தொடர்பான ஒரு முறையினை வகுக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

கௌரவ உறுப்பினரின் பிரேரணையினை வழிமொழிவதோடு, சேதன பசளை தொடர்பாக கௌரவ உறுப்பினர் குறிப்பிட்டிருந்தார், பிரேரணையினை கொண்டுவரும் போது மாத்திரமே அவ்விடயத்தில் ஆர்வத்துடன் பேசுவோம், அதன் முக்கியத்துவம் அனைவருக்கும் தெரியும். கொவிட் காலக்கட்டத்தில் அனைவரும் விவசாயத்தில் ஈடுபட வேண்டிய நிலை ஏற்பட்டது. எனவே நாம் உற்பத்தி செய்யும் பசளையினை இன்னும் தரப்படுத்தி அதனை சந்தைப்படுத்துவதற்கான நடவடிக்கையை சபை மேற்கொள்ள வேண்டும். இவ்விடயத்துடன் சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்கள் நிறைய உள்ளன, அவற்றின் ஆலோசனையையும் உதவியினையும் பெற்று நடவடிக்கை மேற்கொள்ளலாம், வேண்டுமானால் அதற்கான தொடர்புகளை நான் ஏற்படுத்தி தருகின்றேன். கடையினை அமைப்பதற்கும் மற்றும் ஏனைய செலவுகளை பார்க்கும் போது அதன் இலாபத்தை இன்னும் அடைந்துள்ளோமா என்பது சந்தேகமே. அரச சார்பற்ற நிறுவனங்களையும் அழைத்து கலந்துரையாடல் ஒன்றை செய்வோம். சாமிமலையிலும் உரக்கடை ஒன்றை போடலாம். இவற்றிற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

வாகன தரிப்பிட பதிவுகளுக்கான வேலைகள் மேற்கொள்ளப்பட்டுக்கொண்டு உள்ளன, விரைவில் அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும், கடந்த நிதிக்குழுவில் வாராந்த சந்தை ஆரம்பிப்பது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது எனினும் உத்தியோகத்தர்கள் அதனை அறிக்கையில் இணைக்கவில்லை, எனவே அதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும், அத்துடன் சேதன பசளை தயாரிப்பை மேம்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொண்டு தான் இருக்கின்றோம்.

**கௌரவ உறுப்பினர் A.ரவீந்திரராஜா அவர்கள் (ஐ.தே.க)**

தபால் நிலையத்திற்கு அருகிலுள்ள வாகன தரிப்பிட பதிவு தொடர்பாக கௌரவ உறுப்பினர் பிரேரணை முன்வைத்திருந்தார். கடந்த சபையிலும் வேன் தரிப்பிடம் தொடர்பாக பிரேரணை முன்வைத்திருந்தோம், அதற்கமைவாக அன்றைய தினமே எமது உத்தியோகத்தர்கள் வேன் தரிப்பிடத்தை அடையாளமிட்டு நடைபாதையை ஒதுக்கிக்கொடுத்திருந்தனர். அங்கிருந்த கடைக்காரர்களுக்கு பிரச்சினை காரணமாக அவற்றை ஒதுக்கி கொடுத்தோம் தற்போது அங்கு பிரச்சினை இல்லை, எனினும் அவ்வேலைத்திட்டம் சரியான அமுலுக்கு வரவில்லை, பாதையை ஒதுக்கி தந்தால் அங்கு நடைபாதை வேலி அடைக்க இரும்பு வாங்கி தருவதாக கடைக்காரர்கள் கூறுகின்றனர். அத்துடன் வாராந்த சந்தையினை மீண்டும் ஆரம்பிப்பது சிறந்த விடயம் அதற்கான இடத்தையும் தெரிவு செய்தால் நன்மையாக அமையும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**



அதனை பாதையாக வழங்குவதற்கு தான் நாம் அடையாளமிட்டோம். தபால் நிலைய வீதியில் பொது சந்தையினை போடுவோம். அடுத்ததாக கௌரவ உறுப்பினர் எஸ்.சுரேஸ்குமார் அவர்களின் விசேட பிரேரணையினை முன்வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

இன்று காலத்தின் தேவைகேற்ப ஒரு சில பிரேரணைகளை முன்வைத்துள்ளேன். மஸ்கெலியா வட்டாரத்தில் தற்போது குரங்குகளின் நடமாட்டமும் தொல்லையும் அதிகரித்துள்ளது. கிராமப்புறங்களுக்கும் எல்லா இடங்களுக்கும் செல்கின்றன, வீடுகளில் பொருட்கள் மற்றும் ஆடைகளை வைத்திருக்க முடியவில்லை. மக்கள் இதனால் பாரிய பிரச்சினைக்கு முகங்கொடுக்கின்றனர். தோட்டப்புறங்களில் இவற்றின் தொல்லை குறைவாக இருந்தாலும் நகர்புறங்களில் அதிகமாக உள்ளது. கடைகள், உணவங்கள், வீடுகள், பாடசாலைகள் போன்ற இடங்களுக்கு குரங்குகள் சென்று அசௌகரியத்தை ஏற்படுத்தகின்றன. இவ்விடயத்திற்கு நாம் நடவடிக்கை எடுக்க முடியாது, ஆனால் இதற்கான தீர்மானமொன்றை எடுக்கலாம். விலங்குகளின் அச்சுறுத்தல் அதிகமாக இருப்பதாகவும், அவற்றை கொலை செய்யாமல் பாதுகாப்பாக காட்டு பிரதேசத்திற்கு கொண்டு செல்ல சம்பந்தப்பட்ட வனஜீவி அமைச்சுக்கு கடிதம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**தீர்மான இல 16**

குறித்த விடயம் தொடர்பாக வனஜீவி அமைச்சுக்கு கடிதம் அனுப்ப தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

மஸ்கெலியா பிரதேச சபைக்குட்பட்ட நல்லதண்ணி, லக்கம் பிரதேசங்களை நகர்புறங்களாக உள்வாங்குவதற்கான நடவடிக்கைகயை மேற்கொண்டால் இது மஸ்கெலியா பிரதேசத்திற்கு ஒரு ஏந்து பிரதேசமாக மாறும். எதிர்வரும் காலங்களில் அபிவிருத்தி பிதேசமாக மாறும் எனும் விடயத்துடன் துணைவிதி சட்டத்திற்கு அமைய இவ்விடயத்திற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கையை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

லக்கம் பிரதேசத்தில் இதற்கான கூட்டமொன்றை கடந்த காலத்தில் ஏற்பாடு செய்திருந்தோம், அதே போல ஏனைய இடங்களிலும் அவ்வாறான கூட்டங்களை முதலில் நடத்துமாறு கூறியிருந்தோம்.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

நானும் கௌரவ உறுப்பினர் நித்தியானந்தன் அவர்களும் கிராம உத்தியோகத்தருடன் கலந்துரையாடி கூட்டமொன்றை ஏற்பாடு செய்கின்றோம். அவ்வாறு செய்தால் எதிர்காலத்தில் நல்லவொரு நிலைக்கு இட்டுச்செல்லும். எல்லை நிர்ணய சபையினூடாக பிரிக்கப்படும் போது சபைகளை எதிர்காலத்தில் ஒன்றிணைப்பதாக குறிப்பிடப்படுகின்றது. அவ்வாறு மஸ்கெலியா பிரதேச சபை அம்பகமுவவுடன் இணைக்கப்படுமாயின் மஸ்கெலியா பிரதேசத்திற்கான அபிவிருத்திகள் குறையலாம். எனவே இவற்றை நகரமாக பிரகடனப்படுத்தினால் நன்மையாக அமையும்.

**கௌரவ உறுப்பினர் K.நித்தியானந்தன் அவர்கள் (இ.தொ.கா)**

நல்லதண்ணியினை நகரமாக்க நடவடிக்கை மேற்கொண்டால் நல்லதண்ணியிலும் வாராந்த சந்தை ஒன்றை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கவும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

தாங்கள் ஏற்பாடுகளை செய்யுங்கள் சபையினூடாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

மஸ்கெலியா பிரதேசத்தில் உள்ள எமது வேன் தரிப்பிடம் சுருங்கிக்கொண்டே செல்கின்றது, இதற்கான காரணம் என்னவென்று தெரியவில்லை. மண்சரிவாக இருந்தால் மண் சரிந்து கீழே தான் வரவேண்டும். இங்கு

இடம் சுருங்கிக்கொண்டே செல்கின்றது. கடைகள், வீடுகள், தகரங்கள் அனைத்தும் முன்னே வருகின்றது. இப்படியே சென்றால் வேன் தரிப்பிடம் இல்லாமலே சென்று விடும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இவ்விடயம் தொடர்பாக நான் தேடிப்பார்க்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

அடுத்த விடயம் முன்னாள் இராஜங்க அமைச்சரும் தற்போதைய பாரளுமன்ற உறுப்பினருமான கௌரவ ஜீவன் தொண்டமான் அவர்களின் விசேட பணிந்துரையாக பாரளுமன்றத்தில் இருந்தது, அங்கு அவர் கொடுக்கப்பட்ட குரலுக்கு வலு சேர்க்கும் முகமாக இப்பிரேரணையினை முன்வைத்துள்ளேன். அட்டன் நகர சபையினை மாநகர சபையாக மாற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், ஏனைய சபைகளை அதற்கு ஏற்ப மாநகர சபைகள் நகர சபைகளாக மாற்றுவதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதனடிப்படையில் ஒவ்வொரு சபையிலும் வளர்ச்சி அடைவதற்கான முன்மாதிரிகளை எமது சபையினூடாக நாம் செய்ய முடியாது, அவரது முயற்சிக்கு வலு சேர்க்கும் முகமாக எமது சபையினூடாக பிரேரணை முன்வைக்கப்பட்டு கூறப்பட்ட விடயமானது, கட்டாயமாக நடைமுறைக்கு வரவேண்டும் என்பதற்கு ஏற்ப இந்த சபையினூடாக இவ்விடயத்தை முன்னெடுத்து செல்லுமாறு கேட்டுக்கொள்கின்றேன். கௌரவ பாராளுமன்ற அமைச்சர் ஜீவன் தொண்டமான் அவர்களுக்கும், பாரளுமன்றத்திற்கும், ஜனாதிபதி அவர்களுக்கும், சம்பந்தப்பட்ட அமைச்சரின் செயலாளருக்கும் இது தொடர்பாக கடிதமனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்த விடயம் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன, மக்களின் வேதனம் மிகவும் கீழ் மட்டத்தில் உள்ளது, குறைக்கப்படுகின்ற பொருட்களின் விலைகள் எமது நகரங்களிலும் குறைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும், பிரயாண செலவை மையப்படுத்தியே இந்த விலையில் விற்கப்படுகின்றது என்று கூறுகின்றார்கள். சத்தோச விற்பனை நிலையங்களில் விலை குறைவாகவே இப்பொருட்கள் கிடைக்கின்றன, எனினும் எமது பிரதேசத்தில் உள்ளவர்கள் அட்டன் சென்று வாங்க முடியாது பிரயாண செலவு அதிகம். எனவே இவற்றை சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு தெரிவித்து எமது சபை முன்மாதிரியாக செயற்படுமாக இருந்தால் நன்மையாக அமையும்.

**தீர்மான இல 17**

குறித்த விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு கடிதமனுப்ப தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இச்சபையினை அமைதியாக நடாத்திச் செல்ல ஒத்துழைப்பு வழங்கியமைக்கு நன்றி. இத்துடன் இச்சபை இனிதே நிறைவுறுகின்றது.

நன்றி வணக்கம்.

| | |
|---|---|
| **G.செண்பகவள்ளி,** | **S..ராஜவீரன்,** |
| **கௌரவ தவிசாளர் அவர்கள்,** | **செயலாளர்,** |
| **மஸ்கெலியா பிரதேச சபை,** | **மஸ்கெலியா பிரதேச சபை,** |
| **மஸ்கெலியா.** | **மஸ்கெலியா.** |